# தாய்

கத்தோலிக்க சஞ்சிகை - ஆரம்பம் 1997




2024 தை – மாசி தாய் – 27 சேய் – 163




வெளியீடு – கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றம். தொ.பே (0094) 777 289960

விலை – 50/-


நீர் வாக்களித்த அனைத்தையும்
எனக்கெனச் செய்து முடிப்பீர்.
– திருப்பாடல் 138 : 8 –
NOAH ENTERPRISES
- IMPORTERS -
No. 21 China Lane, Colombo 11.
:0094112437468
: pushpagomez15@gmail.com

# தாய்

THAAI

எமது எண்ணம்

January - February 2024

P.O. Box: 1233, Colombo

Mobile: 077 7289960

e.mail:anandapulle@yahoo.com

anandapulle@hotmail.com

www.colombostjosephvazmandram.lk


## "அன்பை உறுதிப்படுத்த இத்தவக்காலம் ஒரு சந்தர்ப்பமாக அமைகின்றது."

மீண்டும் ஒரு தவக்காலத்தை ஆரம்பிக்கின்றோம். மனமாற்றத்திற்கான காலம் ஜெப, தவங்களினூடாக ஆண்டவரை மென்மேலும் அறிய அனுபவிக்க ஆயத்தமாகின்றோம்.

கடவுளால் படைக்கப்பட்ட எல்லா படைப்புகளுள் உயரிய படைப்பு மனிதன். மனிதன் எல்லாவற்றிலும் மேன்மையானவன். இருப்பினும் உலக ஆசைகள், விருப்பங்கள், சோதனைகள் அந்த உயரிய தன்மையில் இருந்து மனிதனை பலவீனப்படுத்துகிறது. ஆகவே, மனிதன் அறிந்தும் அறியாமலும் பலவீனமடைந்து கடவுளின் அன்பிலிருந்து சற்று விலகுகின்றான்.

இந்நிலையை சரி செய்ய பலவீனத்தை பலப்படுத்த அன்பை உறுதிப்படுத்த இத்தவக்காலம் ஒரு சந்தர்ப்பமாக அமைகின்றது. எமது எல்லா தவமுயற்சிகளினதும் நோக்கம் கடவுளுக்கும் எமக்கும் இடையிலான அந்த அன்புறவை சீர்செய்து வலுப்படுத்துவது.

ஆகவே தொடங்கும் இந்த 40 நாள் ஞான ஒடுக்கத்தில் திடசந்தர்ப்பத்தோடு பங்கு பெறுவோம். நோக்கத்தை அடைய இயன்ற எல்லா தவ முயற்ச்சிகளிலும் பக்தியோடு பங்கு பெறுவோம்.

## "தாய்" வாசக நெஞ்சங்களே!

**தற்போது "தாய்" சஞ்சிகையை www.colombostjosephvazmandram.lk என்ற இணையதளத்தின் ஊடாகவும் நீங்கள் காணலாம் என்பதை அறியத் தருகின்றோம். இதன்மூலமாக வெளிநாட்டில் உள்ளவர்களும் இத் தாய் சஞ்சிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.**


## தாய் நிர்வாகம்

**பிரதம ஆசிரியர்**

அருட்பணி. ஆனந்தன் பெர்னாண்டோபுள்ளே

☎ : 0777 289960

**ஆசிரியர்**

அருட்பணி. ஒனாசியஸ் பெர்னாண்டோ

☎ : 0770 090005

**சஞ்சிகை நிர்வாகம்**

திருமதி. டயனா ரமேஸ் - ☎ : 0775 594399

JVM சிரேஷ்ட பெண்கள் குழு

**சஞ்சிகை நிர்வாக ஒருங்கிணைப்பாளர்**

திரு. எனஸ்டன் பெர்னாண்டோ - ☎ : 0774 985940

✉ : enestons@gmail.com

**துணை ஆசிரியர்கள்**

திருமதி. சுமதி கோமஸ் - ☎ : 0773 672113

திரு. ஜெயக்குமார் பெர்னாண்டோ - ☎ : 0777 781275

**கணனி வடிவமைப்பு**

திரு. ரொக் பெர்னாண்டோ

☎ : 0777 732551

**இணையத்தளம்**

www.colombostjosephvazmandram.lk

# மனித நடத்தையே அழிவிற்கு காரணம்

## - நல்மனத்தோர்க்கு அமைதி -

பாலன் இயேசுவின் அருளும் மகிழ்ச்சியும் அமைதியும் உங்களோடு இருப்பதாக. இது பண்டிகைக்காலம். உலகமே இறைமகன் இயேசுவின் பிறப்பை மகிழ்ந்து கொண்டாடும் காலம். இறைபாலனின் பிறப்பு நம் அனைவருக்கும் மீட்பின் நம்பிக்கையை பாவ இருளகற்றி தூய வாழ்வை தருகிறது.

இன்று மனித நடத்தை மனித அழிவிற்கு காரணமாக அமைந்து மக்களை அல்லலுற வைக்கிறது. மக்கள் பொருளாதார நெருக்கடிக்குள் மிகவும் துன்பப்படுகிறார்கன். உலகில் இடம்பெறும் கொடூர யுத்தங்களாலும் இயற்கை அழிவுகளாலும் மக்கள் சொல்லொணா துன்பத்தையும் வறுமையையும் எதிர்கொள்கிறார்கள். பசியாலும் பட்டினியாலும் குழந்தைகள் அவதியுறுகிறார்கள். இச் சூழ்நிலைகளுக்கு முகங்கொடுக்க முடியாமல் நம்பிக்கையிழந்து வாழ்வை அழிக்கும் நிலைக்கு பலர் ஈர்க்கப்படுகிறார்கள். மேலும் போதைப் பொருள் பாவனை யாலும் வேறு நெறிகெட்ட நடத்தைகளாலும் தம் வழ்வை சீரழித்துக் கொண்டிருக்கும் பலர்.

இந்நிலையில் பாலன் இயேசுவின் பிறப்பு நாம் அமைத்துக்கொண்ட குடில், குடும்ப கொண்டாட்டங்களோடு மட்டுப்படுத்தப்படாமல் குழந்தை யேசுவின் "நல்மனத்தோர்க்கு அமைதி" என்னும் செய்தியை காவிச்செல்லும் தூதர்களாக நம்மை மாற்றிக்கொள்ள எதிர்பார்க்கிறது. துன்பத்தில் துயருறுவோருக்கு ஆறுதலாகவும் பசித்தோருக்கு உணவளிப்போராகவும் செயற்படுவோம். நம்மிடம் இருப்பதை இல்லாதவர்களோடு பகிர்ந்து கொள்வோம். உலகில் யுத்த சூழலில் இடர்படும் மக்களுடன் ஒத்துணர்வோம். குழந்தைகளது வாழ்வைப் பாதுகாப்போம். குடும்பங்களில் இருளகற்றி ஒளியேற்றுவோம். நம் சுற்றுச் சூழல் தொடர்பாக அக்கறையோடு செயற்படுவோம். மொத்தத்தில் இறைவன் நமக்கு தந்த அற்புதமான படைப்பனைத்தையும் பாதுகாப்போம். பாலன் இயேசு நம் ஒவ்வொருவருக்கும் பலமாக, வளமாக, பாதுகாப்பாக இருக்கிறார் அவர் தரும் அருளால் மகிழ்ந்திருப்போம். குற்றமற்ற தூய உள்ளத்தோராய் வாழ்வோம்.

உங்கள் அனைவர்க்கும் நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்


**அருட்தந்தை அ.வி. அல்பிரெட் அமதி**
**பிரதி அதிபர்,**
**புனித அந்தோனியார் ஆண்கள் கல்லூரி,**
**கொழும்பு 13.**


---



**கொழும்பு புனித ஜோசப் வாஸ் மன்றத்தின் பயிற்சி பணிப் பிரிவினர், தமது மன்ற உறுப்பினர்களின் இல்லங்களுக்கு சென்று நத்தார் நற்செய்தியை அறிவிக்கும் பணியை 8.12.2023 முதல் ஆரம்பித்தனர்.**



அவள் கருவுற்று ஓர் ஆண்மகவை ஈன்றெடுத்தாள் (வி ப 2 : 2)

# மனித மாண்பின் மேன்மை போற்றும் பெத்லகேம் மண்வாசமே



- செல்வி த. மேரி பற்றீசியா -

இறைமையின் சாயல் மனிதம் இறைநிகரான இரக்கம், பரிவு, பாசம் ஆகிய பண்புகளால் தன்னை அழகுபடுத்தும் சாயல்.

இந்த மனிதத்தை தான் ஏற்று இறைவனின் பேரன்பு மிகச்சிறியோருக்கும் உரிமையாகும் என எளியோருள் தானும் ஒருவன் என கொண்டாட பிரபல்யமே இல்லாத சிற்றூர் பெத்லகேமில் ஒரு மாட்டுத்தொழுவம் புகலிடம் தர மனிதக் குழந்தையாய் உருவானீர் மனித மாண்பின் அர்த்தம் சொல்லி மேன்மை தந்தீர் இயேசுவே

ஆனால் இன்று உன்னதன் இயேசு போற்றிய மனிதம் இப்படித்தான் உடைந்து நொறுங்கி சின்னாபின்னப்பட்டு கிடக்கிறது அவலமாய்

நிறம், மதம், இனம், பணம் என்று பிரித்து தள்ளிவைக்கப்படுகிறது கருக்கலைப்பும், துஷ்பிரயோகமும் தலைவிரித்தாடுகிறது போதையும் பொய்மையும் தொலைபேசியும் இறைவனையே தொல்லையாக்கி தொலைவுக்கு தூக்கியெறிகிறது

உலக மாயையும் வீண் ஆடம்பரங்களும் ஆன்மாவின் அழகை அலங்கோலமாக்கி அழிவின் விளிம்பில் வைத்து நிற்கிறது பண்பாடு தாறுமாறாகி தன்மானம் தலைகுனிந்து நிற்கிறது

உறவுகள் சுக்கு நூறாய் உடைந்து வாழ்வில் வெறுமையோடி கிடக்கிறது வாழ்வின் புனிதம் புதை குழியில் அமிழ்ந்து துர்மணம் வீசுகிறது

உமது பிறப்பும் மாட்டுத்தொழுவமும் விண்ணகப்பாடலும் இடையர்களின் வருகையும் ஞானியர் பரிசும் கற்றுத்தந்த பாடம் மறந்துபோனோம் வேடிக்கையும் வாடிக்கையும் விநோதமும் கலந்து இன்று அர்த்தமற்று மனிதன் கொண்டாடும் நத்தாரின் மறக்கடிக்கப்பட்டு மழுங்கடிக்கப்பட்ட உன்னத செய்தியை இயேசுவே திரும்பவும் சொல்லித்தாருமே வாழ வரம் தாருமே

மனிதம் எத்துனை மேன்மையானது என உணர்ந்து மனித நேயம் கொண்டு வேற்றுமை யாவும் களைந்து மனிதனில் இறைசாயல் கண்டு மகிழ்ந்திட எம் பார்வையை தெளிவாக்கும் உலக மாயை ஆடம்பரங்கள் ஆசைகள் களைந்து வாழ்வை உண்மையாக உன்னதமாக வாழ தேவையானதை மட்டும் தெரிந்து பிறரோடு பகிர்ந்து எளிமைவாழ்வு வாழ உறுதிபூண்டு மாட்டுத்தொழுவம் அமைப்போம்

உலக மகிமை பாராட்டு புகழுக்காய் அதை செய்கிறேன் இதை செய்கிறேன் என இறுமாப்பில் நெஞ்சை நிமிர்த்தாமல் இறையன்புக்காய் அவர் மகிமைக்காய் பணிசெய்து விண்ணக வாழ்வில் நுழையும்போது பாடப்படும் விண்ணக பாடலை கேட்க காத்திருக்க ஆவலில் துன்பம் மறக்க வரம் தாரும்

பதவியில் உயர்ந்தோர் பணத்தில் மிதப்போர் கவரும் நாடகமேடைகள் அமைக்காமல் ஏழைகள், வறியோர், வாழவழியின்றி சமுதாய விளிம்பில் விழிபிதுங்கி நிற்கும் முகவரியிழந்தோருக்கு நண்பராயும் வழிகாட்டியுமாகி இடையருக்கு முக்கியத்துவம்

> “மனிதம் எத்துனை மேன்மையானது என உணர்ந்து மனித நேயம் கொண்டு வேற்றுமை யாவும் களைந்து”

தந்த ஆண்டவரின் அழைப்பிதழை நாமும் தயாரிப்போம்

ஞானியரின் பரிசு பொன் என்பதில் இவ்வுலக அரசர்களில் நம்பிக்கை வைத்து அவர்களின் அடாவடித்தனத்தால் நொந்து வெந்து வருந்தி புலம்பாமல் எம் வாழ்வின் அரசர் இயேசுவின் வழிநடத்தலில் எம்மை கையளித்து மகிழ்ந்து வாழ வரம் வேண்டுவோம் வெள்ளைப்போளம் அவர் அடக்கத்தை குறிப்பதில் இவ்வுலக வாழ்வின் நிலையாமையை உணரந்து விண்ணக வாழ்வை உரிமையாக்கும் உண்மை கிறிஸ்தவ விழுமிய வாழ்வை நேசிக்கும் அருள் கேட்போம்

தூபம் அவர் கடவுள் என பறைசாற்றும் இறைவா எம் அருகிலும் வாழ்விலும் வரலாற்றிலும் உம்மை மையமாய் ஊற்றாய் உன்னத உறவாய் கொண்டாட வரம் கேட்போம்

பட்டாசும் புத்தாடையும் ஆடம்பரங்களும் அலங்காரங்களும் ஒரு பக்கம் நத்தாருக்கு களைகட்ட நாம் கொண்டாட நினைப்பது அர்த்தமற்ற நத்தாரா கிறிஸ்தவ விழுமியங்களை நமதாக்கி செப, தப அருளடையாளத்தை வாழ்வாக்கி இறையன்பிலும் அருளிலும் நாம் வாழ்ந்து மனித மாண்பை போற்றும் செயல்களால் நம் உள்ளங்களையும் இல்லங்களையும் அலங்கரித்து மனிதம் வாழ்ந்திட நம்மையே அர்ப்பணிப்போம் மனித மாண்பிழந்த இடங்களை புயலென தாக்கி அழிப்போம்

இறையன்பால் நிறைந்து பிறர்நலம் பேணி அன்பு, பகிர்வு, இரக்கம், பணிவு, பாசத்தால் இயேசுவையே அனைவருக்கும் வழங்கும் விண்மீன் நாம் ஆவோம்




# தேர்ந்து தெளிதல்

எமது வாழ்வில் பல கோணங்களில், பல சந்தர்ப்பங்களில் பல்வேறு வகையான முடிவுகளுக்கு நாம் கடந்து செல்ல வேண்டி இருக்கின்றது. ஒவ்வொரு கட்டத்தினுள் நாம் எடுத்த முடிவுகளின் மொத்த வடிவம் தான் நமக்கு சரியான பல முடிவுகள் வெற்றியான, மகிழ்ச்சியான வாழ்வைக் கொடுத்துள்ளன. பிழையான முடிவுகள் தோல்வியையும் குழப்பத்தையும் ஏற்படுத்தி உள்ளன என்பதை நாம் அனுபவித்து இருக்கின்றோம். இது மறுக்க முடியாத உண்மையும் கூட.

எமது வாழ்க்கையில் தேர்ந்து தெளிதல் என்பதன் அவசியத் தன்மையை இச்சிறு கட்டுரையில் வரைய முனைகின்றேன். எம் அன்றாட வாழ்க்கையில் மூன்று நிலைகளில் தேர்ந்து தெளிதல் என்பது அலசி முடிகின்றது:

- அறிவுசார் நிலை
- ஒழுக்க நிலை
- ஆன்மீக நிலை

அறிவுசார் நிலையில் எது சரியானது எது பிழையானது என்னும் தெளிதல் அவசியமாகின்றது. இது ஓர் சமூகம் சார் எனும் நிலையில் கூட அமைகின்றது. ஒழுக்க நிலையில் எது நன்மையானது, எது தீமையானது எனும் கேள்வி ஊடாக பார்க்கப்படுகின்றது.

ஆன்மீக வாழ்க்கையில் எங்கே செல்வது, எப்படி வாழ்வது, எதனை செய்வது என்னும் கேள்விகள் ஊடாக தேர்ந்து தெளிதல் அர்த்தம் பெறுகின்றது. அறிவுசார் நிலையில் எமது இன்பம் சார் விடயத்திலும், ஒழுக்க நிலையில் எமது ஒழுக்கம் சார் தேவையிலும் ஆன்மீக ரீதியில் எது மிக்க நன்மை தரக்கூடியது எனும் எண்ணத்திலும் தேர்ந்து தெளிதல் அர்த்தம் பெறுகின்றது.

உண்மையில் தேர்ந்து தெளிதல் என்பது எப்போது தெளிவான, குழப்பமற்ற முடிவை எடுக்கவேண்டி இருக்கின்றதோ அப்போதே இது செயற்படுத்தக்கூடியது. நிச்சயமற்ற தன்மையில் இருந்து ஒரு தெளிவை நோக்கி பயணிக்க உதவுகின்றது. இது பெரிய நன்மையை ஏற்படுத்தக்கூடியது என்பதே தேர்ந்து தெளிதலில் செல்வாக்கு செலுத்துகின்றது.

பசியாய் இருக்கும் போதோ, கோபத்திலோ, தனிமையின் உச்ச உணர்விலோ, களைப்பின் மிகுதியிலோ நாம் தேர்ந்து தெளிய முயலக் கூடாது என்பதும் உண்மையாகின்றது.

தேர்ந்து தெளிதலில் இறைவன் பற்றிய எமது சரியான புரிதல் அவசியமாகின்றது. இறைவனை பொதுவாக மூன்று நிலைகளில் பார்க்க முயலாதிருக்கிறார். எமது எண்ணப்படி வாழ அனுமதிப்பதில்லை அல்லது அனைத்தும் அவரது எண்ணப்படியே இடம்பெறுகின்றன அல்லது எல்லாம் எமது தலைவிதி, இதனை மாற்ற முடியாது என்னும் சிறு கட்டுப்பாட்டுக்குள் வாழ முயல்வர்.

> “ உண்மையில் தேர்ந்து தெளிதல் என்பது எப்போது தெளிவான, குழப்பமற்ற முடிவை எடுக்கவேண்டி இருக்கின்றதோ ”

இன்னும் சிலர் கடவுளை ஒரு ‘மணிக்கூடு செய்பவராக’ பார்த்து எமது வாழ்வில் சுதந்திரமே கிடையாது என்று எண்ணி ஒரு ‘அடிமை’ நிலையில் வாழ முயல்வர். சுதந்திரம் இழந்தவராக எண்ணுவர்.

இன்னும் ஒரு சிலர் இறைவனை ‘பொருள் வழங்கும் இயந்திரமாக’ (Vending Machine) எண்ணுவர். எதனை விரும்புகின்றோமா அதனை எமக்கு தருவார். எமது தேவைகளை எல்லாம் நிறைவேற்றுபவராக எண்ணுவர்.

இவை பகுதியளவில் உண்மையாயினும் முழு உண்மையல்ல. உண்மையில் இறைவன் ஒரு நடனக் கலைஞர். எமக்கு சுதந்திரத்தையும், முழுமையையும் தருவதோடு எமது புதிய படைப்பாற்றலை எதிர்பார்ப்பவர்.

சரியான தேர்ந்து தெளிதலைப் பெற, நாம் இறைவனைச் சரியாக புரிதல் அவசியம். இறைவனின் குரலையும் அவரது பாதையையும் அறிந்து கொள்ள கூடுதல் நேரத்தை அவரோடு செலவு செய்வது அவசியமே. இதனூடாக அவரது செய்தியை புரியமுடியும். இறைவன் மறைவான செய்திகள் ஊடாக அல்லது அடையாளங்கள் ஊடாக எதனை நாம் செய்யவேண்டும் என்பதை அறிவிப்பார். இறைவனின் விருப்பம் என்பது எமது ஆழ்ந்த விருப்பங்களாக இருக்க முடியும். இன்பம்சார் நிலையையும், ஒழுக்கம் சார் நிலையையும் கடந்து ஆன்மீகம் சார் நிலையில் ஆழமாக நோக்க வேண்டியுள்ளது. இந்த சூழ்நிலை விருப்பத்தை எப்போது அடையாளம் காணுகின்றோமோ அப்போது இறைவனின் திருவுருவம் எது என்பதை அடையாளம் காண முடியும். இதற்கு தியானமும், செபமும், அமைதியும் அவசியமே. முயல்வோம், தேடல் செய்வோம்.

அருட்பணி பி. லீயோ ஆம்ஸ்ட்ரோங்



உம் கட்டளைகளை நான் மறக்கவில்லை. (திபா 119 : 176)

# பொருளுள்ள ஞாயிறு திருப்பலி

**(அருட்பணி. எஸ். ஆரோக்கியராஜ் எழுதிய “திருவழிபாடு ஓர் அறிமுகம்” என்ற நூலிலிருந்து சில பகுதிகள்)**

## திருப்பலியில் தொடக்கச் சடங்குகள்

### 1. அமைதியான சூழல்

திருமௌனம் அல்லது அமைதி திருவழிபாட்டின் ஒரு முக்கிய அங்கமாகும் (திவ 30). குறிப்பாக, திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களுக்கு (திருப்பலிக்கு) முன் கோவிலின் உட்புறத்திலும், வெளிப்புறத்திலும், திருப்பண்ட அறையிலும் ‘அமைதி’ காக்கப்பட வேண்டும் (GIRM, 45, 54, 56, 66, 128, 130, 136) என்று திருப்பலிப் புத்தகத்தின் பொதுப்போதனை கூறுகிறது.



### 2. வருகைப் பாடல்

“வருகைப் பாடல்” என்பது திருப்பலி நிறைவேற்ற வரும் குருவை வரவேற்பதற்காகப் பாடப்படும் பாடல் என்று சிலர் நினைக்கிறார்கள். இது தவறு. அப்படியானால் வருகைப் பாடலின் உண்மையான நோக்கம் என்ன என்ற கேள்விக்கான பதிலை இப்போது காண்போம்.

### 2.1 உள்ளங்களை ஒன்றிணைப்பது

திருப்பலியில் பங்கேற்க வரும் இறைமக்கள் பல்வேறு சூழ்நிலைகளிலிருந்து, பல்வேறு சிந்தனைகளோடும் பல்வேறு பிரச்சினைகளோடும் வருகிறார்கள். அதாவது, அவர்கள் அவிழ்த்து விடப்பட நெல்லிக்காய் மூட்டையிலிருந்த நெல்லிக்காய்கள் போல சிதறிக் கிடக்கக் கூடும். அப்படிப்பட்ட மக்களின் சொல், செயல், சிந்தனை அனைத்தையும் திருப்பலியின் பக்கமாகவும் இறைவனின் பக்கமாகவும் திருப்புவதே இதன் நோக்கமாகும். இன்னும் சற்றுத் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்றால், இது திருப்பலிக்கு வந்திருக்கும் அனைவரின் உள்ளங்களையும் ஒருமுகப்படுத்துவது, உள்ளமும் உடலும் ஒன்றாக இணைந்து வழிபாட்டில் பங்கேற்கச் செய்வது: மக்கள் அனைவரையும் ஒரு வழிபடும் சமூகமாகவும் (Worshipping community) வழிபாடு செய்யும் திருக்கூட்டமாகவும் (liturgical assembly) உருவாக்குவது; அவர்கள் உடல், உள அளவில் முழுமையாகப் பங்கேற்க உதவுவது. இதற்காகவே வருகைப் பாடல் பாடப்படுகிறது.

### 2.2 பொருத்தமானதாக இருக்க வேண்டும்

திருப்பலிக்கான வருகைப் பாடலை நம் விருப்பம் போல், எந்த வருகைப் பாடலாக இருந்தாலும் பாடலாம் என்ற எண்ணம் சரியாதல்ல. மாறாக, அன்றைய திருப்பலியின் மையக் கருத்துக்கு ஏற்ப; அல்லது வாசகங்களுக்கு ஏற்ப; அல்லது கொண்டாட்டத்தின் மகிழ்ச்சியான அல்லது துயரமான (இறப்பு போன்ற) சூழ்நிலைக்கு ஏற்ப அது தேர்ந்து கொள்ளப்பட வேண்டும். சில வேளைகளில் மாலைத் திருப்பலியின் போது, “காலை இளம் கதிரே, நீ கடவுளைத் துதிக்க எழு” என்ற வருகைப் பாடலைச் சற்றும் பொருத்தமின்றி மக்கள் பாடுவதை நானே கேட்டிருக்கிறேன். இக்குறை கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டும்.

### 2.3 மகிழ்ச்சியோடு பாட வேண்டும்

திருப்பலிக்கு வந்திருக்கும் மக்களை ஒன்று சேர்த்து, ஒருங்கிணைத்து, ஒரே குடும்பமாக மாற்றிட உதவும். இப்பாடல் மிகுந்த மகிழ்ச்சியோடும், ஆர்ப்பரிப்போடும் ஆரவாரத்தோடும் பாடப்பட வேண்டும். நம் இதய மகிழ்ச்சியையும் உள்ளுணர்வுகளையும் எதிரொலிப்பதாக இது இருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு, சோகமே உருவானதாக இருக்கக் கூடாது. பாடல்களுக்கு இசை அமைப்பவர்களும் இதை கருத்தில் கொண்டு செயல்படுவது நல்லது.



### 2.4 எல்லாரும் பாட வேண்டும்

திருப்பலிப் பாடல்களைப் பாடல் குழுவினர் மட்டுமோ அல்லது மக்களில் ஒரு சிலர் மட்டுமோ பாடுவது பொருத்தமல்ல. ஏனெனில் திருச்சபையின் “பொது வழிபாடாக” திருப்பலி இருப்பதால், இதை இறைமக்கள் எல்லாரும் சேர்ந்து பாட வேண்டும். இதை அன்னையாம் திருச்சபை மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கூறியுள்ளது என்பதை நாம் எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும். எனவே திருப்பலியில் அனைவரும் சேர்ந்து எல்லாப் பாடல்களையும் பாட வேண்டும். இதையே நாம் “குழுப் பாடல்” (Community Singing) என்று சொல்கிறோம். மேலும் வருகைப் பாடல் பாடும்போது, எல்லாரும் எழுந்து நின்று பாட வேண்டும்; அமர்ந்தவாறே பாடுவது சரியல்ல.

இதற்கு உதவியாக திருப்பலிப் பாடல்கள் அச்சடிக்கப்பட்ட அட்டைகளையோ அல்லது பாடல்

தொடர்ச்சி 22ம் பக்கம்

உங்கள் கடவுளாகிய ஆண்டவர் இரக்கம் மிகு இறைவன். [இச 4 : 31]



# 2024ம் ஆண்டிற்கான திருத்தந்தையின் கருத்துக்களுக்காக வேண்டுதல்கள்.

1) தை – திருச்சபையிலுள்ள பன்முகத்தன்மை என்னும் கொடைக்காக.
2) மாசி – தீராநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்காக.
3) பங்குனி – நவீன உலகின் மறைசாட்சிகளுக்காக.
4) சித்திரை – பெண்களின் மகத்தான பங்களிப்பிற்காக.
5) வைகாசி – குருமட மாணவர்கள் மற்றும் துறவியரின் உருவாக்கலுக்காக.
6) ஆனி – தம் இல்லங்களை விட்டு புலம்பெயர்ந்தோருக்காக.
7) ஆடி – நோயிற்பூசுதல் பெறும் நோயாளிகளுக்காக.
8) ஆவணி – அரச தலைவர்களுக்காக.
9) புரட்டாதி – இயற்கை அழிவுகள் மற்றும் காலநிலை மாற்றங்களினால் பாதிப்புக்குள்ளானவர்களுக்காக.
10) ஐப்பசி – ஒன்றிணைந்து பயணப்படும் திருச்சபைக்காக.
11) கார்த்திகை – குழந்தையொன்றை இழந்து தவிக்கும் பெற்றோர்களுக்காக.
12) மார்கழி – நம்பிக்கையின் திருப்பயணிகளாக நாம் மாற.

**கொழும்பு புனித ஜோசப் வாஸ் மன்றத்தினர், மன்றத்தின் உறுப்பினர்களாக இருந்து இறையடி சேர்ந்தவர்களின் ஆன்மாக்களுக்காகவும், மன்ற உறுப்பினர்களின் மரித்த உற்றார் உறவினர்களின் ஆன்மாக்களுக்காகவும் வேண்டி, 25.11.2023 அன்று லொக்கேட், புனித செபஸ்தியார் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.**



# சேனைக்குரிய பக்தி

## VEXILLUM LEGIONIS - சேனை அணிவகுப்புக் கொடி

### மரியாயின் சேனையின் தனிச் சிறந்த சேவையாக விளங்குவது

### வீடுகளுக்குச் சென்று மக்களை சந்தித்தல்

சேனைக்குரிய பக்தி, அதன் பல்வேறு செபங்களில் பிரதிபலிக்கப்படுகிறது. கடவுள் பேரிலும், தம் பிள்ளைகள் மட்டில் அவர் கொண்டிருக்கும் அன்பின் பேரிலும் சேனை ஆழ்ந்த நம்பிக்கை வைத்திருக்கின்றது. இந்த நம்பிக்கை என்னும் அடித்தளத்தின் மீதுதான் சேனை எழுப்பப்பட்டிருக்கின்றது. நம் சேவைகளிலிருந்து மிகுந்த மகிமை அடைய கடவுள் விரும்புகின்றார். ஆகவே, அவர் நம் உழைப்பைப் புனிதப்படுத்தி பயனுள்ளதாக்கி, நீடித்த நன்மை பயக்கச் செய்கிறார். சில நாட்கள் நாம் பரபரப்பாக உழைத்த பிறகு வேறு சில நாட்கள் அசட்டையாக சோம்பிக் கிடந்தால் கடவுள் நமது பணிகளில் நம்மோடு இருக்கின்றார் என்பதை நாம் மறந்து விடுகிறோம் என்பதுதான் பொருள். மாறாக அவர் தான் நம் உள்ளத்தில் நல்ல கருத்துக்களைத் தோற்றுவிக்கிறாரென்றும், நம் உழைப்பை பயன்தரும் வரையில் அவரே தான் நமக்குத் துணை புரிகிறாரென்றும் நாம் உள்ளூர உணர வேண்டும். ஒரு பணியின் வெற்றியை நம்மை விட பன்மடங்கு மிகுதியாக அவர் விரும்புகின்றார். நாம் விரும்பும் ஒரு மனந்திரும்புதலை நம்மைவிடப் பன்மடங்கு அதிகமாக அவர் விரும்புகின்றார். நாம் புனிதர்களாக ஆசைப்படுகிறோம். நம்மை விடப் பல்லாயிரம் மடங்கு அதிகமாக அதை அவர் விரும்புகிறார்.

தங்களையே புனிதமாக்குதல், பிற ஆன்மாக்களுக்குச் சேவை புரிதல் ஆகிய இவ்விரு வகை அலுவல்களிலும் நல்ல தந்தையாகிய கடவுள், தங்களுடன் இருந்து துணை செய்கிறார் என்ற உணர்ச்சி சேனையார்க்கு எப்பொழுதுமே ஆறுதல் தரவேண்டும். வெற்றிக்கு மிகப் பெரும் இடையூறாயிருப்பது அவநம்பிக்கையைத் தவிர வேறெதுவுமில்லை. நம்பிக்கை மட்டும் போதிய அளவு நம்மிடம் இருந்தால், உலகம் முழுவதையும் வெல்ல, கடவுள் நம்மைக் கருவிகளாகக் கையாள்வார்.

**அற்புத மாதா கியூரியா அங்கத்தவர்கள், நீர்கொழும்பு**

# தவக்காலம்



அன்னையாம் திருச்சபையானவள் திருவழிப்பாட்டு சுற்றில் தவக்காலத்தை மனமாற்றத்தின் காலமாக எமக்கு படிப்பினை ஊட்டி வருகின்றாள். பெப்ரவரி மாதம் இவ்வருடம் 14ஆம் திகதி விபூதி புதனுடன் தவக்காலம் ஆரம்பமாகின்றது. எமது வாழ்வை பின்னோக்கிப் பார்த்து, எமது தவறுகள், குற்றங்களை உணர்ந்து மனதில் உள்ள வெறுப்புக்கள் மன கசப்புகள் என்பவற்றை களைந்து உண்மையான மனமாற்றத்தை காணவும், மீண்டும் புதிய பாதையில் எமது வாழ்வை மாற்றி அமைக்கவும், நமக்கு இத்தவக்காலம் துணை புரிகின்றது. கத்தோலிக்கர்களாகிய நாம் விபூதி புதன் தினத்தில் ஒருசந்தியும், உபவாசமும், சுத்த போசனமும், அனுசரிக்க கடமைப்பட்டுள்ளோம். எனவே இத்தவக்காலத்தை சிறந்த முறையில் பயன்படுத்தி, நல்லதொரு கிறிஸ்தவ வாழ்வுக்குள் அடி எடுத்து வைப்போம்.



# கொழும்பு பெரிய சிலுவைப்பாதை

**1996**ம் ஆண்டு கொழும்பு நகரில் அப்பொழுது வாழ்ந்து வந்த குருக்கள் முக்கியமாக புதுச்செட்டித்தெரு, புனித வியாகுல மாதா ஆலய பங்குத்தந்தை அருட்பணி. ஆனந்தன் பெர்ணான்டோபுள்ளே, செக்கடித்தெரு, புனித அன்னம்மாள், அன்னை வேளாங்கண்ணி பங்குத்தந்தை காலஞ்சென்ற அருட்பணி. மத்தியு, புதுக்கடை, புனித செபஸ்தியார் ஆலய பங்குத்தந்தை அருட்பணி. இக்னேஷியஸ் வர்ணகுலசிங்கம், கொட்டாஞ்சேனை, உதவி பங்குத்தந்தை காலஞ்சென்ற அருட்பணி. ஒகஸ்டின் பெர்ணான்டோ ஆகியோர் கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்ற ஆரம்ப கர்த்தாக்களின் உற்சாகப்படுத்தலுடன் இந்த சிலுவைப்பாதையை ஒரு சில பங்குகளுக்கூடாக செல்லும் வகையில் ஆரம்பித்து வைத்தார்கள்.

ஒவ்வொரு வருடமும் தவக்காலத்தின் முதலாம் ஞாயிறு தினத்தில் பி.ப. 3.00 மணியளவில் புதுச்செட்டித்தெரு, புனித வியாகுல மாதா ஆலயத்தின் முன்பாக ஆரம்பமாகும் ச்சிலுவைபாதையானது, கொச்சிக்கடை, புனித அந்தோனியார் ஆலயம் வழியாக செக்கடித்தெரு, அன்னை



வேளாங்கண்ணி ஆலயம் வழியாக பயணித்து கிட்டத்தட்ட 4 மணித்தியாலங்களின் பின் கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தை வந்தடைகின்றது. ஒவ்வொரு வருடமும் படிப்படியாக வளர்ந்து வந்த இச்சிலுவைப் பாதையானது, இவ்வருடம் 28 தடவையாக நடைபெறுகின்றது. குறிப்பாக நாட்டில் நிலவிய அசாதாரண நிலைகளின் மத்தியிலும் (குறிப்பாக ஆலய குண்டுதாக்குதல்கள் மற்றும் கொரோணா காலத்திலும்) இச்சிலுவைப் பாதையானது தடையின்றி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. கொழும்பு மறைமாவட்டத்திலும், ஏனைய மறை மாவட்டங்களிலும் வாழும் தமிழ் கத்தோலிக்கர் களுடைய ஆன்மீக தாகம் தீர்க்கும் நீரோடையாக இந்த சிலுவைப் பாதையைக் காணக் கூடியதாக உள்ளது.

கொழும்பு உயர் மறை மாவட் டத்தின் பேராயர்களான பேராயர் நிக்லஸ் மார்க்கஸ் ஆண்டகை பேராயர் ஒஸ்வால்ட் கோமிஸ் ஆண்டகை பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு திருப்பலி ஒப்புக் கொடுத்து சிறப்பித்திருப்பது இந்நிகழ்விற்கு அவர்களது அங்கீகாரத்தையும். துணை ஆயர்களான ஆயர் இம்மானுவேல் பெர்ணான்டோ ஆண்டகை மற்றும் ஆயர் என்டன் ரஞ்சித் ஆண்டகை ஆகியோரது தொடர்ச்சியான பங்களிப்பு இந்நிகழ்விற்கு வலுவூட்டியும் வருகின்றது.

இந்த சிலுவைப்பாதையில் பாவிக்கப்படும் ஒலி அமைப்பு மெச்சத்தக்கது. ஐந்து கிலோமீட்டர் தூரத் திற்கு செல்லும் இந்த சிலுவைப் பாதையில் எங்கு நின்றாலும் சிலுவைப் பாதை சிந்தனை மறையுரையை கேட்டு பயனடையக் கூடிய வகையில் ஒலி அமைப் பானது மன்ற இளைஞர் களால் கிட்டத்தட்ட 10 நாட்களாக ஆயத்தம் செய்யப்பட்டு அமைக் கப்படுகின்றது.

கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்ற பாடற்குழாம்

தொடர்ச்சி 22ம் பக்கம்





எனக்கு அவர் குறித்துள்ளதை அவர் நிறைவேற்றுவார் (யோபு 23 : 14)

# SUGUMAR
## RELIGIOUS REPOSITORY





**Wholesale & Retail**
**Dealers in all of Religious Articles**

No. 16, Sri Ramanathan Road, Colombo - 13.
Tel : 0112433197














**கொழும்பு வலய மறையாசிரியர் தினம் 28-01-2024 அன்று கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதி. வணக்கத்துக்குரிய மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் வெள்ளவத்தை புனித லோரன்ஸ் கன்னியர் மடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 25 மற்றும் 50 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்த மறையாசிரியர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். இந்நிகழ்வில் மும்மொழியையும் சார்ந்த 1000 மறையாசிரியர்கள் கலந்து சிறப்பித்தனர்.**





கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றத்தினர், தமது பாதுகாவலரின் திருவிழாவை ஹெறாரணை, புனித மார்டின் டி போரஸ் ஆலயத்தில் 14. 1. 2024 அன்று கொண்டாடினர்.





கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றத்தின் பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டு குழுவின் ஏற்பாட்டில் 20 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியானது 04.02.2024 அன்று கிரான்பாஸ் புனித சூசையப்பர் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இதில் எட்டு அணிகள் கலந்து கொண்டதில் இறுதி ஆட்டத்திற்கு தெரிவான புதுக்கடை அணியை தெமடகொட அணியினர் வெற்றி கொண்டு வெற்றிகிண்ணத்தைப் பெற்றுக் கொண்டனர்



உன்மேல் அன்பு செலுத்துகிறவர்களை நேசி. உன்மீது கோபம் கொண்டவர்களை அதைவிட அதிகமாக நேசி. - அன்னை தெரேசா



நீர் கொழும்பு
தோப்பு
அன்னம்மாளின்
திருமகளாகிய
மரியாள்
கியூரியாவின்
ஆண்டுப் பொது
ஒன்றிப்பு
விழா
(2023-11-26)



கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றத்தின்,
உறுப்பினர்களுக்கான நத்தார் ஒன்று கூடலானது 28. 12. 2023 அன்று
அன்னை வேளாங்கண்ணி நடு நிலையத்தில் நடைபெற்றது.

# இலவச மருத்துவ முகாம்

**கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றத்தின் பெண்கள் பிரிவினர் இலவச மருத்துவ முகாமொன்றை 11.11.2023 அன்று அன்னை வேளாங்கண்ணி நடுநிலையத்தில் ஏற்பாடு செய்திருந்தனர். அதில் கொழும்பு பிளாசா லயன்ஸ் கழகத்தினர் இலவச மூக்குக்கண்ணாடிகளை வழங்கினர்.**



















# நத்தார் குடில் போட்டி - 2023



Nishanthini Family
Rajagiriya
1ம் பரிசு



Jady Dukeson
Kotahena, Col -13
2ம் பரிசு



Melon Jerald
Ginthupitiya Street,
Colombo -13.
3ம் பரிசு

கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றத்தின்,
பயிற்சி பணிப்பிரிவின் சிரேஸ்ட பெண்கள் குழுவினர்
நத்தார் பாலன்குடில் போட்டி ஒன்றை
சமூக வலைத்தளத்தின் ஊடாக நடாத்தினர்.
இதில் முதல் மூன்று இடங்களை பார்க்கலாம்.


*Leonard Peiris & Family*

**(Dental Technician)**

82/16, Sri Ramanathan Flats,
Colombo - 13.
Tel : 0112 - 348142
Mob : 0777 - 487562
E-mail : leonard_peiris@gmail.com




ஆண்டவர் நம்மை நினைவு கூர்ந்துள்ளார். (தி பா 115 : 12)

# ஆதித்திருச்சபையில் கற்றுக்கொள்ளும் கிறிஸ்தவம் – தொடர் கட்டுரை –

## உரோமையர் 5 : 1 – 20

நாம் இறைவனை அறியுமுன்னரே நம் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து நமக்காக தம் உயிரைக் கையளித்தார். ஏனெனில் அவர் நம்மை அறிந்திருக்கிறார். நம்மை அளவற்ற விதத்தில் அன்பு செய்கிறார். பாரபட்சமில்லாத அன்பு. ஆகவேதான் நாம் கிறிஸ்து இயேசுவின் இரத்தத்தால் கடவுளுக்கு ஏற்புடையவராகி அவர்வழியாக தண்டனை தீர்ப்பிலிருந்து மீட்பினைப் பெறுகிறோம்.

ஆதியிலே இறைவன் படைத்த மனிதனாலே பாவம் இவ்வுலகில் நுழைந்தது. இறைவனுக்கு நாம் கீழ்ப்படியாமையினாலேயே அலகை அம்மனிதனை ஆட்கொண்டது. அலகை அவனை வசப்படுத்தி பாவத்தில் அவனை வீழ்த்தியது. இறைவனிடமிருந்து எம்மை பிரித்தெடுத்து நம்மைத்தம் நித்திய நரகவேதனைக்குள் வீழ்த்திவிடுவதுமே அலகையின் சூழ்ச்சியாகும். இதனை நாம் எதிர்கொள்ள விசுவாசம் என்னும் நம்பிக்கையின் கேடயத்தை நாம் ஏந்திவாழவேண்டும். இந்த விசுவாசமே நம்மையும் அலகையையும் பிரித்து இறைவனுடன் எமக்கு ஆழமானஉறவை ஏற்படுத்துகிறது. இதனால் நாம் துன்பங்களைத்தாங்கிக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

ஏனெனில் துன்பத்தால் மனவுறுதியும் மனவுறுதியால் பொறுமையும் பொறுமையால் எதிர்நோக்கும் விளையும். இந்த எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது. காரணம் இறைவனால் தம் துணையாளராக எமக்கு அருளப்பட்டுள்ள தூய ஆவியானவர் எமக்குள் இருந்து நமக்கு வலுவூட்டி நம்மை திடப்படுத்தி வழிநடத்துகிறார்.



எனவே நம்முடைய இலக்கு பரலோக வாழ்வாகும். இந்தவாழ்வைநோக்கியே நாம் இந்த பூமியில் பயணிக்கின்றோம். குறுகிய கால இவ்வாழ்வில் நாம் இறைவனை மறந்து மறுதலித்து வாழ்ந்து நம் நிலையான வாழ்வை இழந்து விடாது எமது ஆன்மாவை காத்துக்கொள்வோம்.

– திருமதி. கோமஸ் –

**தொடரும்.**

# அன்னையர் தியானம்



இத்தியானமானது மார்ச் மாதம் 23 ஆம் திகதி சனிக்கிழமை
காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை
மருதானை, புனித பாத்திமா அன்னை ஆலயத்தில் நடைபெறும்
இத்தியானத்திற்கு அனைத்து அன்னையர்களையும்
மற்றும் திருமணமான அனைத்து பெண்களையும்
கலந்து பயன்பெற அன்புடன் அழைக்கின்றோம்.

ஏற்பாடு : **கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றம் பயிற்சி பணிக்குழு (கனிஷ்ட பெண்கள் பிரிவு)**

**தொடர்புகளுக்கு:**
**திரு. வினோலிசன் பெர்னாண்டோ - 0773725735,**
**திருமதி. நிர்மலா பெர்னாண்டோ - 0777249645, திருமதி. ரெனிஷா கோமஸ் - 0777104445**

# க. பொ. த. (சா/த) மாணவர்களுக்கானது

1. கிறிஸ்தவர்களின் அதிமேன்மையான புனித நூலாகிய திருவிவிலியத்தில் அடங்கியுள்ள நூல்களின் எண்ணிக்கை
   1. 46 ஆகும். 2. 70 ஆகும். 3. 72 ஆகும். 4. 73 ஆகும்.

2. ‘தெயோபில்’ என்ற பெயரின் அர்த்தம் என்ன?
   1. பெரிய மறைத்தூதுவன் 2. சித்திரக் கலைஞன் 3. நெருங்கிய நண்பன்
   4. ஆண்டவரின் நண்பன்

3. சிமியோனின் புகழ்ச்சிப்பாடல் பாடப்படுவது எவ்வேளை திருப்புகழ் மாலையிலாகும்?
   1. காலை 2. நண்பகல் 3. மாலை 4. இரவு

4. ஆரம்பத் திருச்சபையில் பின்வரும் எவ்விடயம் தொடர்பாக பிரச்சினை ஏற்பட்டது?
   1. திருத்தூதர்களின் கற்பித்தல் 2. பந்தி பரிமாறும் பணி 3. நட்புறவு 4. செபித்தல்

5. விசேட தூதுரைப் பணியாளனான புனித பவுலை அறிமுகம் செய்யும் பெயரைத் தெரிவுசெய்க.
   1. பிற இனத்தவரின் திருத்தூதர் 2. தமஸ்குவின் திருத்தூதர் 3. மறைத் தூதுவர்களின் திருத்தூதர்
   4. உரோமையின் திருத்தூதர்

6. “உமது சொற்படியே வலைகளைப் போடுகிறேன்” எனக் கூறியவர் யார்?
   1. புனித யாக்கோபு 2. புனித யோவான் 3. புனித பேதுரு 4. புனித பவுல்

7. திருச்சபை பரிசுத்தமாயிருப்பது
   1. புனித நகரில் ஆரம்பிக்கப்பட்டதனால் ஆகும். 2. திரு விவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதனால் ஆகும்.
   3. உலகெங்கும் பரவியிருப்பதனால் ஆகும். 4. மூவொரு கடவுளுடன் கொண்டுள்ள உறவினால் ஆகும்.

8. “எவரும் வாழ்நாள் முழுவதும் கவனியாது விட்ட எதனையுமே அவரது மரண நேரத்தில் நிறைவேற்ற முடியாது” இவ்வாறு கூறியவர் யார்?
   1. திருத்தந்தை I ஆம் அருளப்பர் சின்னப்பராகும். 2. தூய யோசப்வாஸ் அடிகளாராகும்.
   3. அருட்பணி யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளாராகும். 4. தூய திருத்தந்தை II ஆம் அருளப்பர் சின்னப்பராகும்.

9. தூய நற்கருணையின் சிறப்பியல்புகள் இரண்டு அடங்கும் விடையைத் தெரிவுசெய்க.
   1. பலி, செபம் 2. உடன்படிக்கை, வேண்டுதல் 3. நன்றி கூறுதல், நினைவுகூருதல்
   4. உணவு, விண்ணப்பம்

10. யூத பாஸ்கா உணவில் முக்கியத்துவம் பெற்றவை மூன்று,
    1. பாஸ்கா செம்மறி, கசப்புக்கீரை, திராட்சை இரசம் 2. புளியாத அப்பம், கசப்புக்கீரை, கோதுமை, அப்பம்
    3. திராட்சை இரசம், கோதுமை அப்பம், கசப்புக்கீரை 4. பாஸ்கா செம்மறி, புளியாத அப்பம், கோதுமை அப்பம்

11. உடலில் விஷமேற்றிக் கொல்லப்பட்ட அருட்பணியாளர் யார்?
    1. மக்ஸிமிலியன் கோல்பே 2. யாக்கோமே கொன்சால்வேஸ் 3. மனுவெல் த மிராண்டா 4. மைக்கல் றொட்றிகோ

12. ‘விசுவாசத்தின் தந்தை’ என்னும் விருதைப் பெற்றவரும், இடையருக்குரிய வாழ்க்கை நடாத்தியவருமான நபர் யார்?
    1. புனித பேதுரு 2.செக்கரியாஸ் 3. புனித யூதா 4. ஆபிரகாம்

13. பெற்றோருக்கு கீழ்ப்படிந்து அவர்களை மதித்து அவர்களைப் பராமரிக்க நமக்குப் பணிப்பது, எத்தனையாவது கட்டளையாகும்?
    1. மூன்றாவது 2. நான்காவது 3. ஐந்தாவது 4. ஆறாவது

14. நாம் தாய்வயிற்றில் உருவாகுமுன்பே இறைவன் நம்மை அறிந்திருப்பதாக எந்த இறைவாக்கினரின் அழைத்தலின் மூலமாக எடுத்துக் காட்டப்படுகிறது?
    1. ஆமோஸ் 2. நாத்தான் 3. எரேமியா 4. மீக்கா



“நான் விரும்புகிறேன், உமது நோய் நீங்குக!” (மாற்1 : 41)

- பின்வரும் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு 15 ஆம், 16ஆம் வினாக்களுக்கு விடை தருக.
  A – இணையத்தினூடாக ஆபாச படங்களை பார்த்தல்
  B – நேர்மையற்ற முறையில் வாக்குரிமை வழங்குதல்
  C – பொதுச் சொத்துக்களை அழித்தல்
  D – திருமண வாக்குறுதியை மீறல்
  E – நற்பெயரைக் கெடுத்தல்

15. ஆறாவது மற்றும் ஒன்பதாவது இறை கட்டளைகளுக்கு எதிரான செயல்களாவன
1. A யும் B யும் 2. A யும் D யும் 3. B யும் C யும் 4. B யும் E யும்

16. ஏழாவது மற்றும் பத்தாவது இறை கட்டளைகளுக்கு எதிரான செயல்களாவன
1. B யும் C யும் 2. B யும் E யும் 3. C யும் D யும் 4. C யும் E யும்

17. அனனியா மற்றும் சப்ரினாவின் சம்பவத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் செய்தியாவது,
1. மற்றவர்களுக்கு மரியாதை செலுத்துதல் 2. தாழ்மையுடயவராக வாழுதல்
3. நேர்மையாகச் செயற்படுதல் 4. ஏழைகள் மீது இரக்கம் காட்டுதல்

18. திருப்பலியில் மறைபரப்பும் பணிக்காக நம்மை வழி அனுப்பி வைப்பது
1. மறை உரையின் பின்னராகும் 2. நற்கருணை பெற்றதுடனாகும்
3. நற்செய்தியை எடுத்துரைப்பதனாலாகும் 4. இறுதி ஆசீரினாலாகும்

19. இறுதி இரா உணவின் போது இயேசு தமது சீடர்களுடன் செய்த செபம் எது?
1. நம்பிக்கையாளரின் மன்றாட்டு 2. உன்னத குருவின் வேண்டுதல்
3. காணிக்கை மீது மன்றாட்டு 4. பரலோக மந்திரம்

20. கெத்சமனித் தோட்டத்தில் செபிப்பதற்கு இயேசு தம்முடன் அழைத்துச் சென்ற சீடர்கள்
1. பேதுரு, யோவான், யாக்கோபு ஆகும். 2. மத்தேயு, யோவான், யூதா ஆகும்.
3. யாக்கோபு, யூதா, மத்தேயு ஆகும். 4. பேதுரு, யோவான், மத்தேயு ஆகும்.

21. இஸ்ராயேல் மக்களை வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கி அழைத்துச் சென்றது பற்றிக் குறிப்பிடப்படுவது
1. தொடக்க நூலிலாகும். 2. விடுதலைப் பயணம் நூலிலாகும்.
3. நீதிபதிகள் நூலிலாகும். 4. I சாமுவேல் நூலிலாகும்.

22. கத்தோலிக்க திருச்சபை ஏற்றுக் கொண்டுள்ள பழைய ஏற்பாட்டு நூல்கள் எத்தனை?
1. 46 ஆகும். 2. 47 ஆகும். 3. 48 ஆகும். 4. 49 ஆகும்.

23. இறைவன் மோசேக்குத் தாம் யாரென்பதை அறிமுகம் செய்துவைத்தது
1. இஸ்ராயேல் மக்களை அடிமைத் தனத்திலிருந்து மீட்டுக்கொண்டதன் மூலமாகும்.
2. குழந்தை மோசேயை மரணத்திலிருந்து காத்ததன் மூலமாகும்.
3. மோசேக்கு புதுமைகளைச் செய்யும் வல்லமையைக் கொடுத்ததன் மூலமாகும்.
4. எரியும் முட்செடியின் நடுவே காட்சி கொடுத்ததன் மூலமாகும்.

24. சாதாரண இடையருக்குரிய வாழ்க்கை நடாத்திய இஸ்ராயேல் மக்கள் சிறப்பு வாய்ந்த இறைமக்கள் நிலையை அடைந்தது
1. விருத்த சேதனத்தின் மூலமாகும். 2. செங்கடலைக் கடந்ததன் மூலமாகும்.
3. சீனாய் உடன்படிக்கையின் மூலமாகும். 4. வாக்களிக்கப்பட்ட நாட்டில் குடியேறியதன் மூலமாகும்.

25. திருச்சபை கற்பித்ததன்படி திருமுழுக்கு யோவான் சென்ம பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டது.
1. மரியா எலிசபெத்தை வாழ்த்திய போதாகும். 2. தேவதூதன் செக்கரியாவுக்குக் காட்சிகொடுத்த போதாகும்.
3. அவருக்கு 'யோவான்' எனப் பெயரிட்ட போதாகும். 4. அவர் இயேசுவுக்கு திருமுழுக்கு கொடுத்த போதாகும்.

26. இயேசுவின் பகிரங்க வாழ்வும், மறைத்தூதுப் பணியும் ஆரம்பிப்பது.
1. அவரைக் கோயிலில் காணிக்கையாக ஒப்புக் கொடுத்ததுடனாகும். 2. திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப் பெற்றதுடனாகும்.
3. சாத்தானின் சோதனையை வென்றதுடனாகும்.
4. கானா ஊரில் தண்ணீரை திராட்சை இரசமாக மாற்றிய இறைவல்லமை வெளிப்பாட்டினாலாகும்.

# பைபிள் ஹீரோக்கள்

தொடர்ச்சி..... 16

## - பிலயாம் -




ஆக்கம் : இவஞ்சலிஸ்டா வினோலிசன்

அன்பு பிள்ளைகளே, விவிலியத்திலுள்ள பேசும் கழுதை பற்றி தெரியுமா உங்களுக்கு? ஆட்டமும் பாட்டமும் களியாட்டமும் தீமைகள் மலிந்து போன உலகத்திலே நாம் எதை தெரிந்து கொள்கின்றோம்? மேலுள்ள இரண்டு கேள்விக்கும் பதில் சொல்கிறார் இந்த இதழ் ஹீரோ பிலயாம் எகிப்திலிருந்து வந்த இஸ்ராயேலர் மோவாபிய சமவெளிகளில் தங்க, அந்நாட்டு மன்னன், பெருந்திரளான அவர்களை கண்டு பயந்து. கத்தியின்றி யுத்தமின்றி சத்தமின்றி அவர்களை வேறு விதமாய் அழிக்க எண்ணினான். அந்நாட்களில் புகழின் உச்சியில் இருந்தவர் பிலயாம், அவர் வாழ்த்தியோர் வளமோடு வாழ்ந்தனர், அவரால் சபிக்கப்பட்டோர் பூண்டோடு அழிந்தனர். எனவே இஸ்ராயேலரை சபிப்பதற்காக அவரை அழைத்து வரும்படி ஆட்களை அனுப்பினார். பிலயாமோ கடவுளின் விருப்பத்தை அறிந்த பின் தம் இணக்கத்தை கூறுவதாய் சொன்னார். கடவுளோ, அவரை தடுக்கவே மன்னின் தூதர்களை திருப்பி அனுப்பி விட்டார்.





இரண்டாம் முறை அவர்களை விட மதிப்புகுரியோரை அனுப்பினார். மிகுதியான செல்வத்திற்கு ஆசைப்பட்டு, இஸ்ராயேலரை சபிப்பதற்காக அவர்களோடு புறப்பட்டுப் போனார்.

# சிறுவர் பக்கம்

போகும் வழியில் கடவுளின் தூதர் வழிமறித்தார். கழுதை வழியை விட்டு விலகி, வயலில் இறங்க, பிலயாம் அதை அடித்தார்.










இரண்டாவது முறை தூதர் இருபுறமும் சுவர் கட்டப்பட்டிருந்த பாதையில் கழுதையை வழிமறித்தார். இப்போது கழுதை சுவரோடு சாய்ந்து உரசியது. பிலயாம் கழுதையை இரண்டாவது முறையாக அடித்தார்.



கழுதை வாய்திறந்து பேசியது! "மூன்று முறை நீ என்னை அடிக்க நான் என்ன செய்தேன்" என்றது. பிலேயாம் சட்டென தனக்கு முன்னால் நின்ற கடவுளின் தூதனைக் கண்டார். முகங்குப்புற விழுந்தார். கடவுளே உமக்குப் பிடிக்காவிட்டால் நான் இதோ திரும்பிப் போய்விடுகிறேன், என்றார். கடவுளோ அவரிடம், "நீ போ. ஆனால் நான் சொல்வதை மட்டுமே சொல்" என அனுப்பி வைத்தார்.



மூன்றாவது முறையாக தூதர் குறுகலான வழியில் கழுதையை வழிமறித்தார். இப்போது கழுதை வழியிலேயே படுத்துக் கொண்டது. பிலயாம் மூன்றாம் முறையாக கழுதையை அடித்தார்



**பிலயாமின் உயிர் அவர் கழுதையால் காப்பற்றப்பட்டது. அவர் சென்று இஸ்ராயேலரை சபிப்பதற்கு பதிலாக மும்முறை வாழ்த்தினார். எனவே பிள்ளைகளே நாமும் கடவுளுக்கு பிரியமானதை செய்வோம். நேர்வழி செல்வோம்**



"என்னைப் பின்பற்றி வா" (மத் 9 : 9)

# குறுக்கெழுத்துப்போட்டி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

**மேலிருந்து கீழ்**

1 : அன்னை மரியாளின் அன்னை இவர்.
3 : வலிமை மிக்க பெரிய மிருகம்.
6 : பழைய ஏற்பாட்டில் துன்பங்கள் மத்தியிலும் இறைவனை மறுதலியாதவர். (தலைகீழ்)
17 : இது போனால் சொல்லே போச்சு
20 : “தேர்“ என்றும் கூறலாம்.
21 : இதைச்சொல்லி பிள்ளைகளை உறங்க வைப்பர்.
24 : இயேசு இதன் மீது நடந்தார்
28 : “அப்படியே ஆகட்டும்“ என்று பொருள்படும். (தலைகீழ்)

**இடமிருந்து வலம்**

3 - பன்னிரெண்டு கோத்திரங்களின் தந்தை இவர்
7 - இளநீர் மரம் (இடம்மாறியுள்ளது)
16 - சாதுவான மிருகம். (இடம்மாறியுள்ளது
19 - “கை“ என்றும் பொருள்படும். (இடம்மாறியுள்ளது
23 - புனித முடியப்பர் இதனால் கொல்லப்பட்டார். (இடம்மாறியுள்ளது)
25 - ஆண்டின் முதல் மாதம். (இடம்மாறியுள்ளது)
34 - பாடலுடன் இதுவும் சேர்ந்தாலே குதூகலம்தான்.

## கொழும்பு பெரிய சிலுவைப்பாதை


**ஏற்பாடு: கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றம்**

**நாள் : 18.02.2024 ஞாயிறு**

**நேரம் : பி.ப. 3.15 மணி**

**ஆரம்பம் : புனித வியாகுல மாதா ஆலயம்**

**முடிவு : புனித லூசியாள் பேராலயம்**



இச் சிலுவைப்பாதையானது புதுச்செட்டித்தெரு புனித வியாகுல மாதா ஆலய முற்றத்தில் ஆரம்பமாகி கொச்சிக்கடை, புனித அந்தோனியார் ஆலயம் வழியாக செக்கடித் தெரு, அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தின் ஊடாக வந்து கொட்டாஞ்சேனை, புனித லூசியாள் பேராலயம் முன்பாக திருப்பலியுடன் முடிவடையும்.

**கூட்டுத் திருப்பலி :**
கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர்
**மேதகு அன்டன் ரஞ்ஜித் ஆண்டகை**
தலைமையில் நடைபெறும்

## திருப்பலியில் தொடக்கச்.....

புத்தகங்களையோ மக்களுக்கு வழங்கலாம். இன்னும் திருப்பலி தொடங்குவதற்கு முன், கூடியிருக்கும் மக்களுக்கு, 10 அல்லது 15 நிமிடத்திற்கு பாடல் பயிற்சி அளிக்கலாம்.

ஆனால் இன்று நாம் காண்பது என்ன? பங்கு மக்கள் அதிக அளவில் பங்கேற்காத முதல் நற்கருணை (புதுநன்மை) மற்றும் திருமணத் திருப்பலிகள் காலையில் 10 அல்லது 11 மணிக்கோ; அல்லது மாலையில் 3, 4 அல்லது 5 மணிக்கோ கொண்டாடப்படுகின்றன. இத்தகைய திருப்பலிகளில் இன்று பாடல் பாடுவதற்காக, சில வேளைகளில் பணம் கொடுத்து 3 அல்லது 4 பாடகர்களை "வாடகை"க்கு அமர்த்துகின்றனர்.

அந்தப் பங்கைப் பற்றியோ அல்லது மணமக்களைப் பற்றியோ எதுவும் அறிந்திராத அந்தப் பாடகர்கள் திருப்பலியோடு ஒன்றிப்பதில்லை; உணர்வு பூர்வமாக அதில் ஈடுபாடு கொள்வதில்லை. ஏதோ வாங்கிய "காசுக்காகவும் கடமைக்காகவும்" பல வேளைகளில் பாடிவிட்டுச் செல்கின்றனர். மக்களோ தங்கள் வாயைத் திறப்பதே இல்லை. இது கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டும்.

தொடரும்


33வது வருட ஹினிதுமை

# திருயாத்திரை

பெப்ரவரி 24 – 25 சனி, ஞாயிறு

பங்குத்தந்தை அருட்பணி ஜீட்ராஜ் பெர்ணான்டோ,
உதவிப்பங்குத் தந்தை அருட்பணி ரவீந்திரன்
அவர்களின் வழிகாட்டலில்

**மறையுரை :**
அருட்பணி போல் றொபின்சன்,
அருட்பணி றொக்ஸன் அவர்களின்
(அருளுரையுடன் சிலுவைப்பாதை திருப்பலி நடைபெறும்.)

புறப்படும் நேரம் : அதிகாலை 5.30 மணிக்கு
திகதி 24.02.2024

தொடர்புகளுக்கு :
MR.MARIYADAS - 077 220 5460
MR.SURESH - 077 110 7573
MR. THOMAS - 076 499 0974
MR. DILIP - 075 443 0886

கட்டணம் ரூபா 1900/-

ஏற்பாடு : திருச்சிலுவை சபையுடன் திருயாத்திரைக் குழு
புனித சூசையப்பர் ஆலயம், கிராண்ட்பாஸ்


## பெரிய சிலுவைப்பாதை.....



அருட்பணி. ஆனந்தன் பெர்ணான்டோபுள்ளே அடிகளாரின் தலைமையில் ஒரே இடத்தில் நின்று பாட சிலுவைப்பாதை செல்லும் ஐந்து கிலோ மீட்டர் தூரத்திற்கும் கேட்கும் வகையில் ஒலி அமைப்பானது அமைக்கப்பட்டிருக்கின்றது.

ஆரம்ப காலத்தில் இச்சிலுவைப்பாதையில் இயேசுவை ஏந்திய சிலுவை அடங்கிய ரதம் மாத்திரமே பவனியில் பாவிக்கப்பட்டது. பிற்காலத்தில் பங்கு கொள்ளும் மக்கள் தொகை அதிகரித்த காரணத்தால் இயேசுவின் கைகள் கட்டிய பாடுபட்ட சுரூபமும். இயேசு சிலுவையை சும்ந்து செல்லும் சுரூபமும் தாங்கிய மேலும் இரு இரங்களும் பவனியில் எடுத்துச்செல்லப்படுகின்றன.

மன்றத்தின் மேலும் ஒரு பணி பற்றி அடுத்த இதழில் பார்ப்போம்.......




கிராண்பாஸ் பங்கு, புனித சூசையப்பர் மறைப்பாடசாலையில் புதிதாக தேர்வு செய்யப்பட்ட மாணவர்தலைவர்கள், 2024 தை மாதம் 21ம் திகதி காலை 7 மணி திருப்பலியில், பங்குத்தந்தை, உதவி பங்கு தந்தை மற்றும் பங்கு மக்கள் முன்னிலையில் தங்களது உறுதிமொழியினை வழங்கினார்கள்.





'காண்கின்ற இறைவன் நீர்' (தொ நூ 16 : 13)


Nixon Miralee
NM
Nixon Miralee
Quality is Everyone's Responsibility




"மறை வளர ஒன்றிணைவோம்"


இச்சஞ்சிகை அருட்பணி. ஆனந்த பெர்னாண்டோபுள்ளே அடிகளாரால் 20.01.2024 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.

*Printed by : JRCA Digital Graphics (Pvt) Ltd. 78, Brassfounders Street, Colombo-13. : 077 177 6646 : 075 777 6646*